தினமலர்
உண்மையின் உரைகல்

**வரும் நவம்பர் மாதத்திற்கு 19.15 லட்சம் டன் சர்க்கரை ஒதுக்கீடு**

அக்டோபர் 28,2011,00:36



புதுடில்லி:மத்திய அரசு, வரும் நவம்பர் மாதத்திற்கு, பொது வினியோகத்திற்காக 19.15 லட்சம் டன் சர்க்கரையை ஒதுக்கீடு செய்துள்ளது. இது,நடப்பு அக்டோபர் மாதத்திற்கு ஒதுக்கீடு செய்திருந்ததை விட,(19.95 லட்சம் டன்) 82 ஆயிரம் டன் குறைவாகும். தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அக்டோபர் மாதத்திற்கு, அதிகளவில் ஒதுக் கீடு செய்ததாக, மத்திய அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் நவம்பர் மாதத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 19.15லட்சம் டன் சர்க்கரை,வெளிச் சந்தை மற்றும் பொது வினியோக திட்டத்திற்கு போதுமானதாகும். இதில், 17.01 லட்சம் டன் சர்க்கரை வெளிச் சந்தையில் விற்பனைக் கும், 2.14 லட்சம் டன் பொது வினியோக திட்டத்தின் வாயிலாகவும் வினியோகிக்கப்படும். மத்திய அரசின் உணவு அமைச்சகம்,நாட்டின் சர்க்கரை தேவையை பொறுத்து,சர்க்கரைஆலைகளிலிருந்து,பொது வினியோகம் மற்றும் வெளிச்சந்தைக்கு சர்க்கரையை ஒதுக்கீடு செய்து வருகிறது.சர்க்கரை ஆலைகள்பொது வினி யோக திட்டத்திற்கு, அவற்றின் மொத்த சர்க்கரை உற்பத்தியில்10சதவீதத்தை விலையில் அரசுக்குவழங்க வேண் டும். கடந்த ஆண்டு ஜனவரி மாதத்தில், சர்க்கரையின் விலை மிகவும் அதிகரித்து காணப்பட்டது. ஆனால், தற்பொழுது இதன் விலை 40 சதவீதம் குறைந்து, ஒரு கிலோ 30-32 ரூபாய் என்ற அளவில் உள்ளது.தற்போது நாட்டின் சர்க் கரை உற்பத்தி, 2.43 கோடி டன் என்ற அளவில் உள்ளது. உள்நாட்டில், சர்க்கரைக்கான தேவை ஆண்டுக்கு 2.10 - 2.15 கோடி டன் என்ற அளவில் உள்ளது.

**தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டை விலை ரூ.2.82 ஆக உயர்வு**


அக்டோபர் 28,2011,00:37



நாமக்கல்:தமிழகம்,கேரளாவில்,முட்டைவிலை,6 காசுகள் உயர்த்தப்பட்டு 282 காசுகளாக நிர்ணயம் செய் யப்பட் டுள்ளது.பிற மண்டலங்களில் முட்டை விலை விவரம்:சென்னை,282காசுகள்,பெங்களூரு,270காசுகள், மைசூரு, 268 காசுகள், ஹைதராபாத், 260 காசுகள்,மும்பை,285 காசுகள்,விஜயவாடா,252 காசுகள்,கோல்கட்டா 288 காசு கள், பார்வாலா, 291 காசுகள், டில்லி, 303 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழுவின் நாமக்கல் மண்டல சேர்மன் டாக்டர் செல்வராஜ் தெரிவித்ததாவது:கோல்கட்டா, பார்வாலா, டில்லி ஆகிய இடங்களில் முட்டைக்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித் துள்ளதால்,அதன்விலை கணிசமான அளவு உயர்ந்துள்ளது. அதனால், ஹைதராபாத், விஜயவாடா,ஹோஸ்பெட் உள்ளிட்ட இடங்களிலும் முட்டை விலை ஏற்றம்கண்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**உணவுப் பொருள் பணவீக்கம் 11.43 சதவீதமாக உயர்வு**

அக்டோபர் 28,2011,00:47



புதுடில்லி:நாட்டின் உணவுப் பொருள் பணவீக்கம், அக்டோபர் 15ம் தேதியுடன் முடிந்த வாரத்தில், 11.43 சதவீத மாக அதிகரித்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 10.60 சதவீதமாக இருந்தது. ஆக, உணவுப் பொருள் பணவீக்கம், 0.83 சதவீதம் அதிகரித்துள்ளது. உணவுப் பொருள் பணவீக்கம் தொடர்ந்து இரண்டு வாரங்களாக இரட்டை இலக்க அளவில் இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், காய்கறிகள், பால் மற்றும் புரதப் பொருள்கள் சார்ந்த உணவுப்பொருள்களின் விலை மிகவும் அதிகரித்து காணப்பட்டது.காய்கறிகள் விலை,25 சதவீத அளவிற்கு அதி கரித்துள்ளது.மேலும்,பழங்கள்(11.96 சதவீதம்),பால்(10.85 சதவீதம்), மீன், முட்டை,இறைச்சி (12.82 சதவீதம்) ஆகியவற்றின் விலையும் உயர்ந்திருந் தது. இது தவிர,பருப்பு வகைகளின் விலை,9.06 சதவீதமும்,உணவு தானி யங்கள்,4.62 சதவீதமும் அதிகரித்துள்ளது. இருப்பினும், வெங்காயத்தின் விலை, 18.93 சதவீதமும், கோதுமை விலை, 0.95 சதவீதமும் மற்றும் உருளைக் கிழங்கின் விலை0.45 சதவீதம் என்ற அளவிலும் குறைந்திருந்தது.முக்கிய பொருட்களின் விலை11.75 சத வீதம் என்ற அளவில் உயர்ந்துள்ளது.இது,இதற்கு முந்தைய வாரத்தில், 11.18 சதவீதம் என்ற அளவில் குறைந்து காணப் பட்டது.மொத்த விலைக் குறியீட்டு எண் கணக்கீடு செய்வதில்,முக்கிய பொருட்களின் பங்களிப்பு,20 சதவீதத்திற் கும் அதிகமாக உள்ளது.உணவு சாராத பொருட்களின் பிரிவின் கீழ் உள்ள,நூலிழை,எண்ணெய்வித்துக்கள் மற்றும் தாதுப் பொருட்களின் விலை, 7.67 சதவீதம் குறைந்துள்ளது.இது,முந்தைய வாரத்தில், 8.51 சதவீதம் என்ற அள வில் அதிகரித்து காணப்பட்டது. கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில்,எரிபொருள் மற்றும் மின்சாரத்தின் விலை,14.70 சத வீதம்என்ற அளவில் குறைந்துள் ளது இது, இதற்கு முந்தைய வாரத்தில்,15.17 சதவீதம் உயர்ந்து காணப்பட் டது. நாட்டின் பொதுப் பணவீக்கம், 2010, டிசம்பர் முதல்,9 சதவீதத்திற்கும் அதிகமாக என்ற அளவில் இருந்து வரு கிறது.இது,கடந்த செப்டம்பரில்,9.72 சதவீதமாக இருந்தது.பணவீக்கத்தை கட்டுக்குள் கொண்டு வரும் நட வடிக் கையாக,வங்கிகளுக்கான வட்டி விகிதத்தை,ரிசர்வ் வங்கி,2010, மார்ச் மாதம் முதல்,தற்போது வரை,13 முறை உயர்த்தியுள்ளது.மேலும்,வரும் டிசம் பருக்குள் தேவை மற்றும்அளிப்பில் உள்ள ஏற்றத்தாழ்வு குறைந்து, வரும் மார்ச் மாதத்திற்குள் பணவீக்கம், 7 சதவீதமாக குறையும் என ரிசர்வ் வங்கி எதிர்பார்க்கிறது.

## இரண்டாம் போக நெல் நடவுப் பணி தீவிரம் தடப்பள்ளி, அரக்கன்கோட்டையில் சுறுசுறுப்பு

பதிவு செய்த நாள் : அக்டோபர் 28,2011,23:58 IST

கோபிசெட்டிபாளையம்:தடப்பள்ளி,அரக்கன்கோட்டை பாசனத்தில், இரண்டாம் போக நெல் நடவுப் பணி தீவிரமாக நடக்கிறது.பவானிசாகர் அணையில் திறக்கப்படும் தண்ணீர், கோபி

அருகே கொடிவேரியில் தேக்கி வைக்கப்பட்டு, அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசன கால்வாய்களுக்கு திறக்கப்படுகிறது. இவ்விரு கால்வாய் பாசனத்திலும், 24 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் உள்ளன. நெல் மட்டும் 10 ஆயிரம் ஏக்கரில் பயிராகிறது. கரும்பு, வாழை, மஞ்சள் உள்ளிட்ட பயிர்களும் சாகுபடி செய்யப்படுகிறது. ஏப்ரல் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் இறுதி வரை முதல் போக சாகுபடி நடந்தது. செப்டம்பர் மாதம் இரண்டாம் போகத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. கோபி, பங்களாபுதூர்,கரட்டடிபாளையம், பாரியூர் உள்ளிட்ட பகுதிகளில் ஒரு மாதமாக, நாற்றங்கால் விடும் பணி,உழவுப் பணி தீவிரமாக நடந்தது. உழவுப் பணி நிறைவடைந்ததை தொடர்ந்து, நாற்று நடவுப் பணி துவங்கியுள்ளது.

ஈரோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஆத்தூர், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட பகுதியை சேர்ந்த கூலித் தொழிலாளர்கள் நடவுப் பணியில் ஈடுபட்டுள்ளனர். விவசாய கூலியாட்கள் பற்றாக்குறை,உரச்செலவு போன்ற காரணத்தால், விவசாயிகள் பாதிக்கப்படுவதை தவிர்க்கும் வகையில்,செம்மை நெல் சாகுபடி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இருப்பினும், பெரும்பாலான விவசாயிகள் குத்து நாற்று முறையில் பயிரிடுகின்றனர்.

விவசாயி ஒருவர் கூறியதாவது: தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் இரண்டாம் போகத்துக்கான நடவு பணி சென்ற ஒரு வாரத்துக்கு முன் துவங்கியது. கூலி ஆட்கள் பற்றாக்குறை தொடர்கிறது. பெண் கூலியாட்களுக்கு நாள் ஒன்றுக்கு 120 ரூபாய் கூலி தருகிறோம். அதிகம் கூலி கொடுத்தாலும், திருப்பூர் பகுதியில் பனியன் கம்பெனிகளுக்கு ஆட்கள் சென்று விடுவதால், விவசாய கூலியாட்கள் கிடைக்கவில்லை. மேலும், 100 நாள் வேலை திட்டம் காரணமாக அந்தந்த பகுதியிலேயே பலர் வேலைக்கு சென்று விடுகின்றனர்.

ஏ.எஸ்.டி., - ஏ.டி.டி.,-45, - ஏ.டி.டி.,39, - ஏ.டி.டி., 38, - பி.பி.டி.,5204(டீலக்ஸ் பொன்னி) - ஐ.ஆர்.20, -கோ.43 மற்றும் குண்டு ரகம் போன்ற நெல் ரகங்கள் நடவு செய்கிறோம். ஏ.எஸ்.டி., ஒரு கிலோ 25 ரூபாய், ஏ.டி.டி.,-45 ஒரு கிலோ 24 ரூபாய், ஏ.டி.டி.,39 ஒரு கிலோ 24 ரூபாய், ஏ.டி.டி., 38 ஒரு கிலோ 23 ரூபாய், பி.பி.டி.,5204 (டீலக்ஸ் பொன்னி) ஒரு கிலோ 26 ரூபாய், ஐ.ஆர்.20ஒரு கிலோ 24 ரூபாய், கோ.43 ஒரு கிலோ 23 ரூபாய், குண்டு ரகம் ஒரு கிலோ 11ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

நடப்பாண்டு நெல் கொள்முதல் விலை கிலோவுக்கு ஒரு ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளதால் மகிழ்ச்சியாக உள்ளது. இருப்பினும், உரம் உள்ளிட்ட பொருட்களின் விலை

உயர்ந்துள்ளதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். உரம் விலை உயர்வை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**நடப்பாண்டு மஞ்சள் விலை உயர வாய்ப்பில்லை!**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 28,2011,23:58 IST

ஈரோடு:ஈரோடு சந்தைக்கு 70 நாட்களில் புதிய மஞ்சள் வரத்தாகவுள்ளதால், நடப்பாண்டு விலை உயர வாய்ப்பில்லை என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

மஞ்சள் உற்பத்தியில் இந்தியா முன்னணி நாடாகத் திகழ்கிறது. இந்தியாவில் ஆண்டுதோறும் 185.32 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில், 701.66 லட்சம் டன் மஞ்சள் உற்பத்தியாகிறது. தமிழகத்தில் ஆண்டுதோறும் 33 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் 158.64லட்சம் டன் மஞ்சள் உற்பத்தியாகிறது.தமிழகத்தில் ஈரோடு மாவட்டம் மஞ்சள் உற்பத்தியில் முன்னணி மாவட்டமாக திகழ்கிறது.

பார்க்க பளபளப்பாக இருக்கும் மஞ்சளை "கோரா' சரக்கு எனவும், அதற்கு அடுத்த ரகத்தை "சாய சரக்கு' என்கின்றனர். "கோரா' மஞ்சளும், "சாயச்சரக்கு' மஞ்சளும் அதிகளவில் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

நடப்பாண்டு மஞ்சள் விலை சரிவை சந்தித்துள்ளது. கடந்த வாரத்தில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விரலி குவிண்டால் குறைந்தபட்சம் 4,859ல் இருந்து, அதிகபட்சமாக 5,459 ரூபாய், கிழங்கு 4,106ல் இருந்து 4,689 ரூபாய்க்கு விற்கப்பட்டது. ஈரோடு சொசைட்டியில் விரலி 4,110ல் இருந்து 5,106 ரூபாய்க்கும், கிழங்கு 4,204ல் இருந்து 4,999 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. நடப்பாண்டு மஞ்சள் விலை மேலும் குறையவே வாய்ப்புள்ளதாக,வியாபாரிகள் தரப்பில் பரபரப்பாக பேசப்படுகிறது.

மஞ்சள் வியாபாரி ஒருவர் கூறியதாவது: தீபாவளி முடிந்து முகூர்த்த வியாபாரம் நன்றாக இருந்தால் மட்டுமே மஞ்சள் விலை இதே நிலை நீடிக்க வாய்ப்புள்ளது. இதற்கு மேல் விவசாயிகள் தங்கள் மஞ்சளை விற்கவே வருவர், ஆகவே அதற்குமேல் வருகின்ற நாட்களில் மஞ்சள் விலை உயர்வது சந்தேகமே. மஞ்சள் விலை உயரும் என்பதை எதிர்பார்ப்பதைவிட, இருப்பு வைத்துள்ள விவசாயிகள், தங்கள் மஞ்சளை விற்று பணமாக்கி கொள்வது உத்தமம்.

புதிய மஞ்சள் வரத்தாக இன்னும் 70 நாட்களே உள்ளது. ஜனவரியில் புதிய மஞ்சள் வரத்தாக கணிசமாக அதிகரிக்கும். மாநிலம் முழுவதும் நல்ல மழை பொழிந்துள்ளது. ஆகவே, மஞ்சள் மகசூல் நன்றாக உள்ளது. ஆகவே இந்தாண்டு மஞ்சள் இருப்பு வைக்க உகந்ததல்ல. பெரிய அளவில் ஆர்டர் வந்தாலும் தேவையைவிட மஞ்சள் கையிருப்பு அதிகம் உள்ளது. வரும் மஞ்சள் சீசனில் அதன் விலை திடீரென 3,000 ரூபாய்க்கு குறைந்தாலும் ஆச்சர்யப்படுவதற்கு இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

**தொடர் மழையால்; வெல்லம் உற்பத்தி பாதிப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 28,2011,23:52 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி வட்டாரத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக வெல்லம் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. கோபி வட்டாரத்தில், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் எல்.பி.பி., பாசன நிலங்களில், நெல், கரும்பு, மஞ்சள் ஆகியவை அதிகம் பயிராகிறது. பதிவு செய்யப்பட்ட கரும்பை மட்டுமே சர்க்கரை ஆலையினர் வெட்டுகின்றனர். பதிவு செய்யப்படாத கரும்பு, வெல்லம் உற்பத்திக்கு பயன்படுகிறது.கோபி, கொளப்பலூர், கடத்தூர், கணக்கம்பாளையம், சிறுவலூர், குறவம்பாளையம், புஞ்சை துறையம்பாளையம், பங்களாப்புதூர், கள்ளிப்பட்டி, அத்தாணி, வெள்ளாங்கோயில், குருமந்தூர் உள்ளிட்ட பகுதிகளில் குண்டு வெல்லம் அதிகம் தயார் செய்யப்படுகிறது.

ஈரோடு மாவட்டத்தில் ஒரு வாரமாக நல்ல மழை பெய்து வருகிறது. தொடர் மழையால் ஏற்பட்ட குளிர்ந்த சீதோஷ்ண நிலையால், வெல்லம் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. தொடர் மழை காரணமாக சாறு பிழியப்பட்ட கரும்பு சருகுகளை, எரிபொருளாக்க முடியாமல் வெல்லம் உற்பத்தியாளர்கள் திணறி வருகின்றனர். ஒரு சில இடங்களில் தென்னை, பனை மட்டைகளை எரிபொருளாக பயன்படுத்தி அடுப்பு எரிய வைக்கின்றனர். மழை காரணமாக அடுப்புகளில் ஈரப்பதம் அதிகரித்துள்ளதாலும், எரிபொருட்கள் கைவசம் இல்லாததாலும், பல ஆலைகளில் வெல்லம் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கூலித்தொழிலாளர்கள் பலர் தங்கள் சொந்த ஊருக்கு சென்றுள்ளனர். அவர்கள் மீண்டும் திரும்பாததால் வெல்லம் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது.

வெல்லம் உற்பத்தியாளர்கள் கூறியதாவது: தீபாவளி பண்டிகைக்கு முன் வெல்லம் கிலோவுக்கு இரண்டு ரூபாய் அதிகரித்தது. 30 கிலோ உருண்டை வெல்லம் 800 முதல் 1,000 ரூபாய், நாட்டு சர்க்கரை 60 கிலோ 1,400 முதல் 1,550 ரூபாய், அச்சு வெல்லம் 30 கிலோ மூட்டை 800

முதல் 1,000 ரூபாய் வரை விற்கப்பட்டது. இவ்விலை தொடர்ந்து நீடிக்கிறது. வெல்லம் உற்பத்தி செய்யும் கூலித்தொழிலாளர்கள், தீபாவளி பண்டிகைக்காக தங்கள் சொந்த ஊருக்கு சென்றுள்ளனர். பண்டிகை முடிந்தும் இதுவரை அவர்கள் திரும்பவில்லை. கூலியாட்கள் இல்லாத காரணத்தாலும், கோபி பகுதியில் தொடர்ந்து பெய்யும் மழை காரணமாக வெல்லம் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது.

உத்தரபிரதேசத்தில் வெல்லம் கிலோவுக்கு இரண்டு ரூபாய் வரை பண்டிகைக்கு பிறகு குறைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் வெல்லம் உற்பத்தி தேவையான கரும்பு கிடைக்கவில்லை. இதனால், வெல்லம் விலை குறைய வாய்ப்பு இருக்காது. இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாயிகளுக்கு வழங்க இலவச நாற்றுகள் தயார்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 28,2011,21:38 IST

தேனி : கடமலைக்குண்டு டெப்போவில் விவசாயிகளுக்கு வழங்க இலவச நாற்றுகள் தயார் நிலையில் உள்ளது. கடமலைக்குண்டு தோட்டக்கலைத்துறை டெப்போவில் 17 ஆயிரம் கொட்டை முந்திரி நாற்றுகள், 6 ஆயிரம் மா நாற்றுகள் இருப்பு வைக்கப்பட்டு, விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. பதிவு செய்த விவசாயிகள் தங்கள் பதிவு எண்ணை கூறி நாற்றுகளை பெறலாம். பதிவு செய்யாத விவசாயிகள், சிட்டா, அடங்கலுடன் தோட்டக்கலைத்துறை அலுவலகத்தில் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம், என தோட்டக்கலை உதவி இயக்குனர் செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.